உ

கடவுள் துணை.

பல வித்வான்கள் பாடியருளிய

# தாலாட்டுப் பிரபந்தம்.

மதராஸ் ரிப்பன் அச்சுக்கூடம்.

1908.

விலை அணா 4.

உ

கடவுள் துணை.

# தாலாட்டுப் பிரபந்தம்.

இதில்
பல வித்வான்கள் பாடியருளிய
தாலாட்டுகள் ஒரு பிரபந்தமாகத்திரட்டி
அச்சிடப்பட்டுள்ளன.

சென்னை:
ரிப்பன் அச்சியந்திரசாலையிற்
பதிப்பிக்கப்பட்டது.

1908.

விலை அணா 4.

Copyright Registered.

# பொருளடக்கம்.


| எண். | தாலாட்டுகளின் பெயர். | பக்கம். |
|---|---|---|
| 1 | திருவேங்கடநாதர் கீதாசாரத் தாலாட்டு ... | 1 |
| 2 | தத்துவராயசுவாமிகள் திருத்தாலாட்டு ... | 12 |
| 3 | சிவப்பிரகாச சுவாமிகளருளிய சிவஞானபாலைய தேசிகர் தாலாட்டு ... ... | 17 |
| 4 | சிதம்பரசுவாமிகள் தாலாட்டு ... ... | 27 |
| 5 | ஸ்ரீராமர் தாலாட்டு ... ... ... | 32 |
| 6 | திருப்பரங்கிரிக் குமரவேள் தாலாட்டு ... | 36 |
| 7 | ஆண்பிள்ளைத் தாலாட்டு ... ... | 43 |
| 8 | பெண்பிள்ளைத் தாலாட்டு ... ... | 49 |
| 9 | மத்தியார்ச்சுனம் ஸ்ரீ ஏகநாயகர் தாலாட்டு... | 53 |
| 10 | ஸ்ரீ சங்கர பகவத்பாத சுவாமிகள் திருத்தாலாட்டு ... ... ... | 57 |
| 11 | சீகாழிச் சிற்றம்பலநாடிகள் தாலாட்டு ... | 60 |
| 12 | திருஞானசம்பந்தசுவாமிகள் திருத்தாலாட்டு | 67 |

உ

கடவுள்துணை.

திருவேங்கடநாதர்

அருளிச்செய்த

# கீதாசாரத்தாலாட்டு.

## சிறப்புப்பாயிரம்.

ஆக்கியோன் பெயர், நூல்வந்தவழி, நூற்பெயர், நூற்பயன்.

### வெண்பா.

மாதையர்கோன் வேதநவில் வாய்வேங் கடநாதன்
காதையுறப் பார்த்தனுக்குக் கண்ணனருள்—கீதைக்
கருத்துயர் தாலாட்டாகக் கட்டுரைத் தான்யாருங்
கருத்துயர்தீர்ந் தெய்தக் கதி.

## காப்பு.

### அறுசீராசிரியவிருத்தம்.

ஐவகைப் பொருளு நான்கு கரணமுங் குணங்கண் மூன்றுஞ்
செய்வினை யிரண்டு மொன்றி யாவருந் திகைப்ப நின்ற
பொய்யிரு ளகல ஞானப் பொருட்கதிர் விரித்த புத்தேள்
கைவள ராழிச் செங்கட் கண்ணனைக் கருத்துள் வைப்பாம்.

## நூல்.

சீராரும் பரமார்த்த தெரிசனத்தை யருள்செய்யப்
பேராருந் தேசிகனாய்ப் பெருமானே வந்தவரோ. (௧)

திருத்தேரிற் சாரதியாய்ச் சேர்ந்திருந்துங் கீதையினா
லருச்சுனற்கு மெய்ஞ்ஞான மனைத்துமுறை செய்தவரோ. ()

சாரதியாய்த் தேர்செலுத்தித் தனஞ்சயநீ தானையினைப்
பாரெனப்பார்த் தேவிசயன் பயந்துமலர்த் தாள்வணங்கி. ()

அமர்க்குவந்த சுற்றத்தா ரனைவரையுங் கொல்வதினா
லெமக்கழியாச் சோகம்விளைந் தெய்துமென வேவினவ. (௪)

செஞ்சமரிற் பந்துசனஞ் சேதம்வரு மென்றிரங்கி
யஞ்சினவன் பயந்தீர்த்தே யமர்செய்யச் சொன்னவரோ. ()

சுற்றமறிற் சோகமெனச் சொல்லினைசற் றறிந்தவன்போற்
கற்றுணர்ந்த பேரதனாற் கலங்கார்கா ணென்றவரோ. (௫)

கலங்காரோ விறப்புவரிற் கற்றுணர்ந்த பேரோனு
மலங்காம னானிருக்கும் வகையுரையு மெனவினவ. (௭)

நீயுநா னும்புவிமே னிருபர்களு மெய்யுணர்வா
லாயுங்காற் பிறந்திறப்ப தார்க்குமில்லை யென்றவரோ. (௮)

ஈங்கெவர்க்கும் பிறந்திறப்ப தில்லையென்றீ ரிவ்வுலகி
னீங்குபவ மார்க்கிதனை நிச்சயமாய்ச் சொல்லுமென. (௯)

இத்தரையிற் பிறந்திறப்ப தெடுத்தவுடற் கடுத்தபொறி
நித்தியமா கியவான்மா நின்சொருப மென்றவரோ. (௧௦)

அங்கமுயி ரிந்தியநா னன்றிவே றெனைக்காணே
னிங்கியான் வேறுண்டே லெனக்கறியப் புகலுமென. (௧௧)

மெய்யுயிரிந் திரியமலால் வேறறியே னென்றவனைப்
பையவனைவ யாலறியப் படானுநீ யென்றவரோ. (௧௨)

தேகம்வே றாகிலதைச் சேர்ந்திவ னேதெனவே
சோகமே வினைகருமத் தொடர்ச்சியினா லென்றவரோ. (கங)

தேகமொடா மூன்கருமச் செயல்வருமா றேதெனவே
* ஏகமர மும்வித்து மெனுமுறைபோ லென்றவரோ. (கச)

காயமுந்தா னும்பிறிதே தற் கன்மமெவர் செய்தெனத்
தீயவுடற் கலதுகன்மச் செயறனக்கே தென்றவரோ. (கரு)

பயன்கரும முடல்செய்யிற் பலமுறுவ தார்க்கெனவே
யடாப்பலமு முடற்கேபா லறிவார்க்கே தென்றவரோ. (கசு)

வெவ்வவினை யுடற்கென்றான் மெய்யிங்கே விழுவான்மா
வையமற நரகசொர்க்க மனுபவிப்ப தேதெனவே. (கஎ)

அனுபவமே யிலைபதுவே றாரோ பிதுகிகழ்த்திற்
றனுகரணச் செயறனதாச் சார்வதுபோ லென்றவரோ. (கஅ)

மற்றுடலின் செய்கைதன்மேல் வருமயக்க மேதெனவே
முற்றுணர்வொன் றில்லாத மோகமென்று சொன்னவரோ.

அறிவுதே கத்தனக்கோ வான்மாவிற் கோவெனவே
பிறிவுசெறி லசித்துடலம் பிரமமறி வென்றவரோ. (உ௦)

தேகமசித் தாகிலிந்தச் செயல்வருவ தேதெனவே
யேகபரஞ் சோதியின்முன் னிருக்கையினா லென்றவரோ. ( )

இருக்கினு மசேதனத்துக் கிச்செயலுண் டோவெனவே
யுருக்குபடாக் காந்தமுன்னி லூசிநிக ழென்றவரோ. (உஉ)

சொன்னசெய லுடற்கானாற் சுகதுக்க மியார்க்கெனவே
பன்னசுக துக்கமுந்தா னவ்வுடற்கே யென்றவரோ. (உங)

---

* ஏகபரமரமும் - பாடபேதம்.

சேதனமா மான்மாவைச் சேராத துக்கசுக
மோதுசட மாமுடலை யுற்றிடுமோ சொல்லுமென. (௨௪)

பூதமைந்தே தா னைந்துயிர்கள் புலன்கள்பத்து மனமுதனான்
கீதிருமெய் யிதின்மனத்துக் கின்பதுன்ப மென்றவரோ. ()

இந்தவிரு வணைத்தனுவிற் கேதுவே தெனவினவ
முந்தியகா ரணமதனான் மூன்றாதலு வென்றவரோ. (௨௬)

மனமறியுந் துக்கசுக வரவென்றீ ரம்மனமும்
வினவிலசே தனமலவோ விரித்தெனக்கு விளம்புமென. ()

அம்மனத்தி லான்மா வபேதம்போற் றோன்றுதலால்
விம்முதுக்க சுகத்தைமன மேவுமென்று சொன்னவரோ. ()

அந்தமனே துக்கசுக மதனிடத்து நில்லாமல்
வந்திலங்கு மான்மாவை மருவியதென் சொல்லுமென. (௨௯)

வெய்யகன லின்சூடு மேல்வைத்த சட்டியினு
டெய்யபுன லூடுவதங் கொன்றுதல்போ லென்றவரோ. (௩௰)

சித்தாகு மான்மாவுஞ் சடமாகுஞ் சித்தமுந்தா
னைத்தாங் கிரண்டுமொன்றா யுற்றவகை சாற்றுமென. (௩௧)

வல்லிரும்பு கனலுடனே மருவியது போன்மனமு
மொல்லையிலான் மாவுடனே யுற்றதுகா ணென்றவரோ. (௩௨)

உற்றதெத னாலெனவே யுள்ளம்வி வேகமுறப்
பற்றியதன் மேலுமதன் பண்புவந்த தென்றவரோ. (௩௩)

அடுத்தகுணம் போமோபின் றான்மாவை விட்டெனவே
யெடுத்த*செம்பூ நிறம்படிகத் தேறுதல்போ லென்றவரோ.

* செம்புநிறம் - பாடபேதம்.

சுத்த படிகம்போற் சொரூபமாய்த் தானிருக்க
மெத்தவுமா சர்மலின மேவியதென் சொல்லுமென. (௩௫)

அநாதியாம் வாசனையா லடைந்ததா சாமலின
மனோபந்த மிருக்கின்முத்தி வாராதென் றுரைத்தவரோ. ()

பந்தமெது முத்தியெது பகுத்துரைக்க வேண்டுமென்றன்
சிந்தை தெளியவென்று திருத்தா ளினைவணங்க. (௩௭)

தேகாதி தானெனவே சேரபிமா னங்கள்பந்த
மாகாத மானம்விடி லரியமுத்தி யென்றவரோ. (௩௮)

அபிமானம் வரும்வகையு மாங்கதனைத் தீர்வகையுந்
தபியாம லுனறியத் தயவாகக் கூறுமென. (௩௯)

மறந்திடுமஞ் ஞானத்தான் மரணம்வந்த தஞ்ஞான
மிறந்துவிடின் மானமும்போ மென்னவுரை செய்தவரோ. ()

அந்தமுறை யஞ்ஞான மணுகுவதும் போவதுவுஞ்
சந்தயமி லாதறியத் தயவாகக் கூறுமென. (௪௧)

அஞ்ஞானம் வந்தத னாதியது சொல்வதல்ல
மெய்ஞ்ஞானத் தாலே விடுமென் றுரைத்தவரோ. (௪௨)

இரவியெதி ரடுத்துவந்த விருட்போல வஞ்ஞானம்
வெளிதியோ சேர்ந்திதன்பால் வந்தவகை யேதெனவே. (௪௩)

அந்த வறிவுவந்தா லஞ்ஞான மில்லையப்பாற்
சந்ததமு மானந்த சாகரங்கா ணென்றவரோ. (௪௪)

வேதாந்தத் தாற்குருவாள் மெய்ஞ்ஞானம் வந்தவுடன்
நீதான் துக்கசுகந் தீராத தேதெனவே. (௪௫)

பற்றறுமோ துக்கசுகம் பரோட்சஞா னத்தாலே
யற்றமா மவ்விரண்டு மபரோட்சத் தென்றவரோ. (௪௬)

பரோட்சமபரோட்சமெது பகுத்துரைக்க வேண்டுமென் றன்
றிரோதமாம் புத்திநின்றாய்த் தெளியும் படிக்கெனவே. (௪௭)

பகர்ந்தசத்த ஞானம் பரோட்ச மனுபவத்தா
லகம்பிரம மெனுஞான மபரோட்ச மென்றவரோ. (௪௮)

தான்பிரம மென்றறிந்துந் தனுவைத்தா னென்றபுத்தி
யேன்போக வில்லையதை யெனக்கறியப் புகலுமென. (௪௯)

கேள்வியினான் மனனத்தாற் கிளர்ந்தயோ கங்களினா
லாழ்பிரமத் தனுபவம்வந் ததுதீரு மென்றவரோ. (௫0)

ஆதியாஞ் சிற்சொருப மாகாத தானினிமேற்
சோதிமன னாதியினாற் சொரூபமா மோவெனவே. .. (௫௧)

எப்போதுஞ் சின்மயந்தா னெனன்மறந்து தேடுவது
செப்புமிடற் றணியிருக்கத் தேடுதல்போ லென்றவரோ. ()

தேடியபின் றேகபுத்தி தீர்ந்துபோய்ச் சிற்சொருபங்
கூடுவனோ யானென் குறைதீரச் சொல்லுமென. (௫௩)

வந்தவுடல் வேறாயும் வாசனையாற் றானெனலாற்
சந்தயமென் றற்சொருபந் தானாதற் கென்றவரோ. (௫௪)

தனுவைத்தா னெனும்பிரம்ம சத்தஞா னத்திலறு
தனுபவமெய்ஞ் ஞானத்தா லறும்வகையே துரையுமென. ()

விளக்குவிளக் கெனுமதனால் வெய்யவிருள் போய்விடுமோ
துளக்கமிலா விளக்கேற்றிற் றொலையுமிரு ளென்றவரோ. ()

நெடுங்கால மான்மாவை நீங்காத வஞ்ஞானம்
விடுங்கால மெங்கானோ மெய்ஞ்ஞானத் தாலெனவே. (௫௭)

அந்தகா ரங்குகையி லாயிரநா ளிருந்தாலுஞ்
செந்தீபங் கண்டவுடன் றீர்வதுபோ லென்றவரோ. (௫௮)

கருமயோ கந்தவமே காரணமா நீங்காம
லருமையா ஞானம்வந்தோ வஞ்ஞானம் போமெனவே. (௫௯)

குத்துவெட்டும் படைகளினாற் கூடுமோ விருடுரக்க
வுத்தமமாம் ரவியுதித்தா லோடுமிரு ளென்றவரோ. (௬0)

அஞ்ஞான விருடுரக்க வறியாத நல்லகன்ம
மெய்ஞ்ஞானந் தன்னைப்பரிக்கும் விதமெவ்வா றெனவினவ. ( )

கரும மிருவகையாங் காமியநிட் காமியமென்
றிருவகையி னிட்காம மேதுகா ணென்றவரோ. (௬௨)

கருமமே காரணமாய்க் கட்டுரைத்தி ரிவ்வுலகை
யொருவும் வகையை யெமக்கோதென் றடிபணிய. - (௬௩)

இந்திரசா லம்போல விவ்வுலகை நம்மிடத்திற்
றந்திரமாத் தோற்றுவித்தோஞ் சத்யமல வென்றவரோ. ( )

மின்னைத்தியெ னுஞ் சகத்தாதின்பால் விளங்குமோ வெனவினவச்
சுத்தித்னி லேரஜதந் தோன்றுதல்போ லென்றவரோ. (௬௫)

அயல்வெள்ளி சுத்தியின்மே லாரோ பிதங்கூடு
மியலுள்ள சக்முமுன்வே திருந்ததுமுண் டோவெனவே. ( )

மனமயக்கம் பிடிக்கில்லா வத்துவுந்தோன் றிடுமதுவோ
கனவில்விண்ணிற் றுன்பறக்கக் கண்டதுபோ லென்றவரோ.

கனவுபோற் பிரபஞ்சமென்றீர் கண்விழித்தாற் கனவு
பொய்யாம், வின்வுசகந் தினமுமெய்யா விளங்குவதென
சொல்லுமென. (௬௮)

மெய்பாக விளங்குவது மெய்ஞ்ஞானம் வருமளவும்
பொய்யாம்பின் கனவதுபோற் போதம்வரி லென்றவரோ. ()

முன்புகண்ட கனவுபொய்யா முழிசாக்ரம் போலவென்றீர்
பின்புமுத்தித் தசையடைந்தும் பிரபஞ்சநிற்ப தேதெனவே.

தெரிந்தவர்க்குத் தோற்றுவது தெத்தபடம் போல்வதல்லாற்
பரந்தசகங் காரியத்திற் பயன்படா தென்றவரோ. (௭௧)

கன்மவினை யஞ்ஞானங் கடந்துமதன் காரியமாம்
புன்மையுறு மெய்யுடனே போகாத தேதெனவே. (௭௨)

வெட்டவிழு மரம்பசந்து விளங்குதல்போற் சிலகால
நட்டகன்ம மாய்ந்துமங்க நடித்திடுங்கா ணென்றவரோ. (௭௩)

சென்மம்போய் முத்தியினைச் சேரச் சிலரிருக்கத்
தொன்மையான் மாபலவோ சொரூபம் பகருமென. (௭௪)

பிரமமென்று மீசனென்றும் பெருகுபல சிவரென்று
முரைமயக்க மலதான்மா வொருவனே யென்றவரோ. (௭௫)

எகந்தா னான்மா வெனும்வகையே மெய்யானா
லாகந்தோ றும்பலவா யமர்ந்ததென்னோ சொல்லுமென. ()

பலகடத்திற் சலத்தூடு பானுவிம்பந் தோன்றுதல்போற்,
றொலைவில்புத்தி தொறுமான்மா தோன்றுதல்கா ணென்ற
வரோ. (௭௭)

ஆதித்தன் போலான்மா வளவில்புத்தி தொறுந்தோன்றிற்
சாதிக்கு முத்தியெவர் தமக்கதனைச் சாற்றுமென. (௭௮)

பந்தமுத்தி தானுமந்தப் பரந்தபுத்தி தனக்கேயா
மந்தவிம்பந் தனக்கிலையென் றறிவுவரச் சொன்னவரோ. ()

பரமேக மாயுமதிற் பலசீவ ரேதென்வே
யொருகடலிற் பலகுமிழி யுதிப்பதுபோ லென்றவரோ. (௮0)

சீவனது தானென்றுஞ் சேரும் பிரமமென்று
மாவதுவோ பேரின்ப மாங்கமிதனக் கோதுமென. (௮௧)

ஏகம் பிரம மிரண்டிலைநீ வேறுமல்ல
சோகமுறும் பேதமறிற் றோன்றுமின்ப மென்றவரோ. (௮௨)

*சீவபோதம் போமோ சித்தொன்று மோவெனவே
யாவன்மன மறுஞ்சுழுத்தி யவத்தையிற்பா ரென்றவரோ. ()

பேதமல விவ்வுலகம் பிரமமய மென்றறிந்தும்
பூதமய மாய்த்தோற்றல் போகாத தேதெனவே. (௮௪)

கானலைநீ ரென்றோடிக் கண்டவர்க்குந் தீர்ந்தபின்னும்
வானுலவு நீராகி வயங்குதல்போ லென்றவரோ. (௮௫)

அறிவானு நல்லறிவு மறியப் படும்பொருளும்
பிறிவாய்மூன் றாயிருத்தல் பேதமல வோவெனவே. (௮௬)

சொப்பனத்திற் றனித்தொருவன் றோற்றம்வே றில்லையங்கே
கற்பனையாம் பொருளறிவு காண்பவன்போ லென்றவரோ. ()

கற்பனையாம் பேதங்கள் காணாமற் போம்வகையை
விற்பனமா நானறிய விளம்புமென வேவணங்க. (௮௮)

துரியமாம் யோகத்தாற் றாயமனம் லயமானா
லரியமூ வகைவிகற்ப மழியுமென்று சொன்னவரோ. (௮௯)

* சீவபேதம் - பாடபேதம்.

சிறந்திருக்கு மான்மாவுஞ் செகமெல்லா நிறைந்திருந்து
மறைந்தெனக்குத் தோன்றாத வகையேது சொல்லுமென.

சத்துச்சித் தாநந்தந் தாமூன்று மதனுடனே
யொத்துற்று நாம வுருவஞ் சகமாகி. (௯௧)

இருக்கையினிற் றோற்று நிலைமூன்றும் பிரமமென
மரிக்கில்வரும் பின்னிரண்டு மதிசகமென் றுரைத்தவரோ. ()

அறிந்துகொண்ஞானத்தாலே யான்மாவை யென்றுரைத்தீர்
சிறந்தொளிரு மான்மாவுந் திருசியமா மோவெனவே. (௯௩)

முந்தியஞா னத்தாலே முதிருமஞ்ஞா னந்துறக்கிற்
சிந்தையில்லான் மாச்சுயமாய்த் திகழுமென்று சொன்னவரோ.

இனியமுத்திச் சுகமிருப்ப தெப்படியென் றேவினவ
வனுபவத்தி லறிவிடயா னந்தம்போ லென்றவரோ. (௯௫)

மனலயம்வந் தவரலது மற்றிலரோ முத்தரெனச்
சனகனைப்போற் சீவன்முத்தர் தாமுமுள ரென்றவரோ. ()

சீவன்முத்தி யடைந்தோர்கள் செயலுமவர் தங்குணமு
நாவுரைக்கும் வாசகமு நானறியச் சொல்லுமென. (௯௭)

வருங்கருவு பிறப்பினொடு வளர்தல்பருத் தல்குறைத [ரோ.
லொருங்கலுமெய்க் கென்றதனை யொறுத்திருப்பா ரென்றவ

பார்ப்பதுவுங் கேட்பதுவும் பகர்வதுவுஞ் செல்வதுவு
மேற்பதுவுங் கரணதன்ம மெனத்துணிவா ரென்றவரோ. ()

பசிதாக முயிர்க்கெனவே பயந்துக்கஞ் சுகங்காமம்
வசிகோப மதிக்கெனவே மகிழ்ந்திருப்பா ரென்றவரோ. ()

விருந்தர் ரமுமுறவு மேவியென் றிருந்தாலு
நீடுந்தா மரையிலைநீர் நிகராவா ரென்றவரோ. (௧௦௧)

பற்றிடுங்கா யமுந்தானும் பன்னுகிரன் ருபினும்
லுற்றபுளி யம்பழமு மோடுமொப்பா ரென்றவரோ. (௧௦௨)

கூறுமூல வியற்கையுடன் கூடினுமெய்ஞ் ஞானமடைந்தோர்
சேறும்பிள்ளைப் பூச்சியும்போற் றிரிவார்கா ணென்றவரோ.

ததிபூடு கடைந்தவெண்ணெய் தான்மோரிற் கிடப்பதுபோன்
மதியோடு கூடினும்பின் மயங்கார்கா ணென்றவரோ. (௧௦௪)

அருச்சுனன்றன் பொருட்டாக வனைவருக்கு ஞானம்வரப்
பொருந்தியதே சிகவடிவாம் புண்ணியரே கண்வளரீர். (௧௦௫)

ஆயர் குலமாத ரளவிலோ ரைப்புணர்ந்துந்
தூய பதினறு யிரவருடன் றோய்ந்திருந்தும். (௧௦௬)

பரம முனிவர்முன்னே பரீச்சித்தைத் தீண்டியன்று
பிரமசரி யஞ்செலுத்தும் பேரொளியே கண்வளரீர். (௧௦௭)

வெண்பா.

ஆதிமூ லம்விசயற் காதிமறை யின்பொருளை
யோதி யுணர்த்துமிந்த வுண்மைதனைக் - காதலுற்றுக
கற்றோருங் கேட்டோருங் காசினியில் வாழ்ந்துமுத்தி
பெற்றோர்கள் முத்தர்பெறும் பேறு. (௧௦௮)

கீதாசாரத் தாலாட்டு

முற்றிற்று.

ஸ்ரீ கிருஷ்ண சகாயம்.

கடவுள்துணை.

## ஸ்ரீ தத்துவராய சுவாமிகள்

அருளிச்செய்த

# திருத்தாலாட்டு.

## தத்துவப்பிரகாசம்.

அன்னைத் தரமாகி யாவர்க்கு மெய்தரிய
தன்னைத் தரமேனி சாத்தும் பெருமானே. (௧)

துஞ்சும் பிறவித் துயரை நினைந்தடியே
னஞ்சும் படிகண் டழுவித்த வாண்டகையோ. (௨)

விரும்பித் தனைத்தேட வெவ்வினையே னெஞ்ச
விரும்பைக் கனிசெய்த வெந்தை பெருமானே. (௩)

முன்வேத மெல்லா மொழிவரிய மொய்கழல்கொண்
டென்வே தனைகண் டெழுந்தருளி வந்தானே. (௪)

நன்கொன் றும் வானவர்க ளின் றுணங்க நானிலத்தே
யென்கண் களிக்க வெழுந்தருளி வந்தானே. (௫)

தொந்தனை திரச் சுருதி தொழும்பதத்தை
எந்தனை செய்ய மதிதந்த வள்ளலோ. (௬)

நஞ்சேய் பிறவிக்கு நாயே னடுங்காம
லஞ்சேலஞ் சேலென் றருளும் பெருமானே. (௭)

தேசார் முனிவர்குழா நின் றுணங்கத் தீயேனைக்
கூசாம லாளக் கொடியிட்ட கொண்டலோ. (௮)

மீட்டுகைக்கு முள்ள முருக்கிநில மேல்வீடு
காட்டுகைக்கு வீரக் கழலிட்ட கண்டகனே. (௯)

கண்குளிர நான்கண்டு கொள்ளக் கடிகமழுந்
தண்களப மெய்நிறையச் சாத்தும் பெருமானே. (௧௦)

அனைத்துத் திசைகளுக்கு மப்பாலாய் நின்ற
தனக்குப் பரிவட்டஞ் சாத்தச் சமைந்தானே. (௧௧)

இங்கழுநீர் மாலை யெனக்கருளி யின்னளிசேர்
செங்கழுநீர் மாலை புனைந்தருளுந் தேசிகனே. (௧௨)

புண்டரீ கத்தவனுங் காணாத பொன்முடிக்கே
தொண்டர் திருமாலை சூட்டக் கொடுத்தானே. (௧௩)

செற்ற பிறவி நீறுகத் திருமுண்ட
மற்ற பிறைபோ லணிந்தருளு மண்ணலோ. (௧௪)

ஆங்கோயி லீதென் றடியே னகம்புகுதப்
பூங்கோயி லுள்ளே புகுதும் பெருமானே. (௧௫)

ஆந்த மறைகூற வந்து மடியிணைகண்
டேத்த வடியார்குழா மின்புற் றிருந்தானே. (௧௬)

வேதன மென்னுருவ மாக்குதற்கு வீரசிங்
காதன மேறி யமுந்த விருந்தானே. (௧௭)

தோய முன்பாகத் தொழுதெழுமென் கைப்பொருளுங்
காயமுமா வியுங்கைக் கொள்ளுங் கற்பகமோ. (௧௮)

புண்டரீகக் கைம்மலரென் புன்றலைமேல் வைத்தருளிப்
பண்டை வினைதீரப் பார்க்கும் பெருமானே. (௧௯)

ஆவா விருவ ரறியாத சேவடியை
வாவாவென் றென்றலைமேல் வைக்கும் பெருமானே. (௨௰)

எட்டை வாசித்து விடாமே யெனக்கென்னைக்
காட்டவா வென்ற கருணைத் தடங்கடலோ. (௨௧)

என்ன தியானென் றினியொருகா லத்தினுள்ளு
முன்ன லறவூ னுயிர்வேறு செய்தானே. (௨௨)

பூண்ட புலன்கள் பொறிவழியே போகாமே
மீண்டிரு வென்று விளம்பும் பெருமானே. (௨௩)

புற்கடந் தோன்றாத வண்ணம் புரளாமே
மற்கட மாமனத்தை மாட்டும் பெருமானே. (௨௪)

பொய்யாரு மெய்யில் வேறாகும் புருடனையே
கையா மலகமெனக் காட்டும் பெருமானே. (௨௫)

உனைமறைய மூடு முணர்விலா மாயைக்
கனவிருளைக் காணென்று காட்டும் பெருமானே. (௨௬)

கண்ட விருளைநீ காணாதே யவ்விருளைக்
கண்ட வறிவைநீ காணென்று சொன்னானே. (௨௭)

கண்ட வறிவுதனைக் கொண்டுன்னைக் கண்மறைத்த
பண்டை யிருளைநீ பார்த்துக்கா ணென்றானே. (௨௮)

கங்குலா மாயவிருள் காண்கிலேன் காண்கின்ற
தெங்கு மறிவென் றிசைக்கவிசைந் தானே. (௨௯)

சாதனா மிவ்வுடல நானல்லேன் சான்றாகும்
போதமே நானென்னப் போதிக்கும் போதகனே. (௩௰)

எரணைவு மிஞ்ஞாலத் தோற்ற நிலையிறுதி
காரணனா னானடி காட்டும் பெருமானோ. (௩௧)

யானறிகை யாலே யறிவ னறிவதல்லேல
னானறிவ னாதுமென நாட்டர் தருவானோ. (௩௨)

சான்றா மறிவுருவஞ் சாக்கியமா மிச்சகமுந்
தோன்றாத வண்ணஞ் சொருகுவித்த தோன்றலோ. (௩௩)

இருந்த விருப்பினையும் யானறிவ தின்றித்
திருந்த விருக்க வருள்செய்த தேசிகனோ. (௩௪)

அந்த வுபாதி யுனக்கான வப்பரிசே
யிந்த வுபாதியிறைக் கென்னும் பெருமானோ. (௩௫)

தான்சகத்தைக் கண்டுந் தனைக்கண்டுந் தான்மறந்து
மூன்செயவத் தைமூன் றுண்டிதற்கு மென்றானோ. (௩௬)

அழுந்த விருந்த விருப்பாரா லதுவிட்
டெழுந்திருந்த தாரா லியம்பிக்கா ணென்றானோ. (௩௭)

வல்லிருண் மூடி யறியேனை மற்கடத்தைப்
பல்லிளி கண்டு பதைப்பித்த பண்பனோ. (௩௮)

பதையாத வண்ணம் பரஞ்சுடரைக் காட்டிச்
சிதையா விருளைச் சிதைவித்த சேவகனோ. (௩௯)

மீட்சி செலவின்றி வேறின்றி விண்முதலாங்
காட்சியுங் கண்ணாகக் காணுங்கண் டந்தானோ. (௪௰)

கண்டகண் ணாலே கடலுலகும் பாதலமு
மண்டமு நேராக வயிர்துசெய்த வண்ணலோ. (௪௧)

உதிப்பதெல் லாமு முணர்வன் றுணர்வை
மதிப்பதுவும் விட்டுநீ வாளாவி ரென்றானே. (௪௨)

நாற்றஞ் சுவையொளியூ றோசையெலா நாட்டமெனுந்
தோற்றமுங் காணாதே சும்மாதி ரென்றானே. (௪௩)

சித்தசித் தீசத் திரிவிதமுந் தீர்ந்தபா
ழித்தனைக்கு முற்பத் தியுமிதுவே யென்றானே. (௪௪)

மும்மைப்பாழ் தீர மொழியா மொழியாலே
நம்மைப்பா ரென்று நவிலும் பெருமானே. (௪௫)

அபாவபா வங்களுக் கப்பாலாய் நின்ற
சுபாவமாந் தன்சோதி சொல்லாமற் சொன்னானே. (௪௬)

இவ்வா றறிந்தபரி சென்னவொண்ணா வின்பத்தைச்
செவ்வாய் மலராமற் செப்பும் பெருமானே. (௪௭)

ஆனந்த வெள்ளமென தங்கைக் கனியாக
மோனந்தன் னாலே மொழியும் பெருமானே. (௪௮)

ஆட்டின மாயக்கூத் தென்ன வகத்துள்ளே
கூட்டெனை ஞானக்கூத் தாட்டிய வித்தகனே. (௪௯)

செல்ல லறுத்த சிவப்பிர காசனே
தொல்லை மறைதேர் சொருபா னந்தச்சுடரோ. (௫௦)

சேய்வந்த வானவருங் காணாத சேவடியான்
வாய்வந்த வாபுகழ வாழும் பெருமானே. (௫௧)

திருத்தாலாட்டு

முற்றிற்று.

12

உ

சிவமயம்.

துறைமங்கலம்.

# சிவப்பிரகாச சுவாமிகள்

பொம்மைய பாளையம்

## சிவஞானபாலையதேசிகர்பேரில்

அருளிச்செய்த

# தாலாட்டு.

காப்பு.

நேரிசை வெண்பா.

அவஞானம் போக்கி யருண்ஞான மாக்குஞ்
சிவஞான தேவன் றிருமுன் - றவஞானத்
தாலாட் டெனுந்தமிழைச் சாற்றுதற்கு நற்றுணையா
மாலாட்டு மாமுகத்தன் வந்து.

நூல்.

திருவருளா லென்னைத் தெரிவிக்க விங்குத்
திருவுருவாய் வந்த சிவஞான தேசிகனே. (க)

ஒன்றுநீத்த பூரணமா யின்பவறி வுண்மையாய்
நின்றபடி நிற்கு நிகழ்பிரம மென்றானே. (உ)

தன்சத்தி யாலாந் தலமங்க லிங்கமென
வென்சத்தி பாதத் தெழுந்தருளிச் சொன்னாளே. (௩)

நண்பாகு பீட்டலிங்க நன்றாம் பிராணலிங்க
மொண்பாவ லிங்கமா மோர்பொருளிங் கென்றாளே. (௪)

ஆசார லிங்கமுட னாருங் குருலிங்கந்
தேசாரு மிட்டலிங்கஞ் சேர்ந்தாகு மென்றாளே. (௫)

அந்தப் பிராணலிங்கத் தாகுஞ் சிவலிங்க
மிந்தச் சரலிங்க மென்றறிவ ஞானியோ. (௬)

பாவலிங்கந் தன்னிற் பரமப் பிரசாதந்
தாவகன்ற மாலிங்கஞ் சார்ந்துவரு மென்றாளே. (௭)

ஏகாங்க மேயாகு மின்பத் தியாகாங்கம்
போகாங்கம் யோகாங்கம் போற்றியறி யென்றாளே. (௮)

பத்தனுமா யேசனுமாம் பன்னுந் தியாகாங்க
முய்த்துணரி னென்ன வுணர்த்தும் பெருமானே. (௯)

பிரசாதி யோடு பிராணலிங்கி யாகு
முறைசாரும் போகாங்க மொன்றென்று சொன்னாளே. (௧௰)

சாற்றுமியோ காங்கஞ் சரண னைக்கியனும்
போற்றிநீ காணென்று போதித்த தேசிகனே. (௧௧)

அங்க நவிற்று மந்தநவ லிங்கமொடு
தங்கு மெனவெனக்குச் சாற்றும் பெருமானே. (௧௨)

விழுங்கல் பருகலொடு மெல்லலா சார
மொழுங்கிற் குருசிவமு முற்றிடுமிங் கென்றாளே. (௧௩)

சோகிய லேகியமுஞ் சொன்ன விவற்றறிவு
மேகியுறும் பின்மூன் றிலிங்கத்து மென்றானே. (கச)

இந்தக்கா யார்ப்பணங்க ளிட்டலிங்கத் தென்றெனக்குச்
சந்தப் படவுரைத்துத் தந்தசிவ ஞானியோ. (கரு)

பீடமிடை வட்டம் பெருங்கோ முகமான
மாட இவறு கோளகமா சாராதிக் கென்றானே. (கசு)

நாற்றஞ் சுவையுருவ கல்லூ றொலிநிறைவு
சாற்றுஞ் சடலிங்கஞ் சாருமெனச் சொன்னானே. (கஎ)

வேர்முதலாங் கந்தம் விளங்கு மாமுதலாங்
கூர்மணமா சாரங் குருவினிலா மென்றானே. (கஅ)

தளிராதி கந்தமுகை தான்முதலாங் கந்த
மொளிரார் சிவசரத்தி லுற்றிடுமிங் கென்றானே. (க௯)

காய்முதலாங் கந்தமெலாங் காசில்பிர சாதத்துந்
தூய்மலிமா லிங்கத்துந் துன்னுமெனச் சொன்னானே. (உ0)

மதுரந் துவர்கார்ப்பு வண்புளிகைப் பெல்லாஞ்
சதுரென் றிருத்தியவா சாராதிக் கென்றானே. (உக)

பொன்மைவெண்மை பச்சைமாஞ் சிட்டபோ தங்களெலா
நன்மையவா சாராதி நண்ணுமென்ற நாயகனே. (உஉ)

வன்மைமென்மை வெம்மைதண்மை வாய்ந்த பிசிரமெலாஞ்
சின்மையவா சாராதி சேர்ந்துகொளு மென்றானே. (உங)

கஞ்ச நரம்புதோல் கண்டகுழ லாதியொலி
யஞ்சொலிவை யெல்லாமவ் வாறுமுறு மென்றானே. (உச)

மணமுதலா மைந்து வகைநிறைமேவ லாமு
நனுமுன்றயா சாராதி நாடிலெனச் சொன்னானே. (௨௫)

இம்முறையா ருரு மிலங்குகா ரார்ப்பிதமென்
றெம்மறிவு கொள்ள வியம்புசிவ ஞானியே. (௨௬)

தொட்ட திங்திங் கொன்றைத் தணிந்து நுகர்ந்துமகிழ்ந்
திட்டமைந்து நிற்கு மிலிங்கங்க ளென்றானே. (௨௭)

கூறுமிவை யாவினுமிக் கொள்கை பெறுமிலிங்க
மேறு மிரட்டுநாற் றெட்டாகு மென்றானே. (௨௮)

உருவஞ் சுவைநிறைவா யோங்கர்ப் பிதங்கள்
மருவுந் திறஞ்சொன் மயிலே மலிவிளக்கோ. (௨௯)

சுத்தசித்த மோடுபிர சித்தமெனத் தோன்றுபுபா
சத்தமுத்த மாக்குபிர சாதமரு ளையகனே. (௩௦)

அங்கலிங்க சித்திபத்தி யத்தமுக வர்ப்பிதமேச
டங்களிவை யட்ட சயிலமெனச் சொன்னானே. (௩௧)

குசித்த மழிந்து கும்பநோய் மாற்றுஞ்
சுசித்தமதி லாசாரந் தோன்றுமெனச் சொன்னானே. (௩௨)

குபுத்தி யழிந்து குருநெறியி னிற்குஞ்
சுபுத்திதனி னிற்குஞ் சுடர்குருலிங் கென்றானே. (௩௩)

ஆங்கார மில்லா நிராங்கார வத்தமதி
னீங்கா திலகு நிகழ்த்துசிவ மென்றானே. (௩௪)

கமன மழிந்து கறையற்று நிற்குஞ்
சுமனமதி னின்றிலகுந் தாயசர மென்றானே. (௩௫)

மெய்ஞ்ஞான மாகி மிளிரும் பிரசாதஞ்
சஞ்ஞான வத்தமதிற் றோன்றுமெனச் சொன்னானே. (௩௬)

துற்பாவ நீங்கித் துணிவுபடு மத்தாவித்த
சற்பாவ மாலிங்கஞ் சாருமெனச் சொன்னானே. (௩௭)

ஆதார பீடங்க ளாறினுமவ் வாறிலிங்க
மீதாக வைத்து விளங்கச்செய் வித்தகனே. (௩௮)

ஆறு முகங்களுமவ் வாறுசா தாக்கியமு
மாறு வருணமுமா மாறிலிங்க மென்றானே. (௩௯)

பத்தனொடு மாயேசன் பார்ப்பரிய வாசார
மெய்த்தகுரு நான்கும் விளங்குகுரு வென்றானே. (௪௦)

பிரசா தியுமப் பிராணலிங்கி தானு
முரைசால் சிவசரமு மோங்கிலிங்க மென்றானே. (௪௧)

ஒழிந்தவங்க லிங்க மொருநான்கு நம்பா
வெழுந்தருளுஞ் சங்கமமென் றின்பந் தருவானே. (௪௨)

உருவ முருவருவ முற்றறிதற் கெட்டா
வருவமென நின்றிடுமவ் வாறுமெனச் சொன்னானே. (௪௩)

மாசுதரு தூலாதி மாணவிசு வாதியே
யாசி றியாகாங்க மாதியா மென்றானே. (௪௪)

விரிந்தன வெலாமும் விரிந்தமுன்ற சென்றே.
யொருங்கியங்க லிங்க வுபயமா மென்றானே. (௪௫)

கடத்தி னுபாகியா காயமுற்ற வாபோ
லடுத்த வுபாதியா லங்கலிங்க மென்றானே. (௪௬)

தங்கு மிலிங்கமாந் தற்பதமத் தொம்பதமே
யங்க மயிக்கிய மசிபதமென் றுண்டானே. (௪௭)

ஆக முயிர்தாரிய னாய்நின்ற போதெமைத்தான்
சோகமனத் தானாகத் தோன்றும் பெருமானே. (௪௮)

அமைத்தபரஞ் சத்தத் தசத்தமதிற் சிவன்
றமைப்பகுதி யிற்றோன்றுந் தத்துவங்க ளென்றானே. (௪௯)

நிரஞ்சன ஞானியமா நிட்களத்திற் சித்தா
வருஞ்சுடர்சின் னாதாகி வாய்ப்பமெனச் சொன்னானே. ()

மூலசித்தா னாதாதி மூன்றும் புணர்ந்தாகு
மாலகற்றுஞ் சோதிமய மாலிங்க மென்றானே. (௫௧)

அகராதி மாலிங்கத் தாகியவை கூடித்
தகவா மோங்கார சதாசிவமா மென்றானே. (௫௨)

அந்தச் சதாசிவத்தி லைம்முகத்தா மைம்பூதம்
வந்துற் றிதயத்தான் மாவருமிங் கென்றானே. (௫௩)

அப்பூதம் பஞ்சி கரித்திருபத் தைந்தாகி
மைப்பூணு மான்மாவை மன்னியிடு மென்றானே. (௫௪)

ஆணவத்தான் மூடனா மாருயிர்க்கு முன்வினையான்
மாணா வளிக்குமிறை மாயைவடி வென்றானே. (௫௫)

மேலைவினை யாலுழலு மெய்யுயிர்க்குப் பாகமலக்
காலுறச் சுத்தக் கரணமா மென்றானே. (௫௬)

கூறுமனச் சுத்தமுறக் கொண்டுபிண்ட நாமத்தை
நீறு கலனெறியு நோக்குமெனச் சொன்னானே. (௫௭)

கிரியைமன பாவங் கிடைப்பரிய ஞான
மருவிவிடா தங்கம் வயங்குமெனச் சொன்னானே. (௫௮)

ஞாதிருவு நின்றறியு ஞானஞே யங்களுமற்
பேதமற வென்று மிருந்தபடி வைப்பானே. (௫௯)

வானேத்த வென்று மருவுறக் கிரியபித
நானேத்த நல்குசிவ ஞானகுரு தேசிகனே. (௬0)

மிடியற் றெளிது விழியுற்ற பொன்போ
லடியற்கு வந்திங் ககப்பட்ட வாரமுதோ. (௬௧)

கயிலைமலை மேவுங் கடைப்பிடியாற் சீர்சான்
மயிலைமலை மீதிங்கு வந்தமர்ந்த மாமணியோ. (௬௨)

எல்லாக் கலையுணர்ந்து மெய்தாப் பொருளையொரு
சொல்லாற் றிகழ்த்துதற்குத் தோன்றும் பெருமானே. (௬௩)

சீலந் திகழ்த்துமதிச் சின்னமின்றி யும்படியோர்
கோலஞ் சிவமெனவுட் கொள்ளுமருட் குன்றமோ. (௬௪)

மண்களிக்க நாயேன் மனங்களிக்கக் கண்டுகொண்டு
கண்களிக்க வந்த கருணைப் பெருங்கடலோ. (௬௫)

சம்பந்த னன்றொருநாட் டனுண்ட பாலுரு
வெம்பந்த நீங்க வினிதமுது செய்தானே. (௬௬)

வேண்டுவவெல் லாமுமாம் வெண்ணீ றளிப்பதற்குத்
தீண்டு மலர்க்கைச் சிவஞான தேசிகனே. (௬௭)

இம்மை மறுமை யிரண்டும் பெறவெமக்குச்
செம்மைதர வந்த சிவஞான தேசிகனே. (௬௮)

அரசமய மன்றி யகங்களித்தெஞ் ஞானமும்
பரசமய மும்பணியும் பங்கயப்பொற் றாளானே. (௬௯)

தானபங்க னென்னுமுகன் றன்றனை யைக்கடந்து
மானபங்கம் பண்ணும் வலியொன் றுடையானே. (௭௦)

அறியா தொருநா ளறையினும்வன் பாசஞ்
செறியா தருளுந் திருப்பே றுடையானே. (௭௧)

பூதமுத லெல்லாமும் போக்கியவற் றன்மறைந்து
ஞாதிருவ மென்னை யுந்தறிவித் திட்டானே. (௭௨)

எந்தைசிவ சாதனங்கட் கெல்லாந் திருநீறு
முந்தியதென் றுண்மை மொழியும் பெருமானே. (௭௩)

உருத்திரனே யையமிலை யோருருத்தி ராக்கந்
தரித்தவ னென்றெமக்குச் சாற்றும் பெருமானே. (௭௪)

ஒண்மறையின் கண்ணு முருத்திரமவ் வஞ்செழுத்துங்
கண்மணியென் றையமறக் காட்டு மருட்கடலோ. (௭௫)

அருவாகி நின்றசச்சி தானந்த வீசன்
குருவாகித் தன்னைக் கொடுக்குமெனச் சொன்னானே. (௭௬)

பரம சிவமெனவும் பண்டைமறை போற்றும்
பிரமமென வும்பேர் பெறுமிலிங்க மென்றானே. (௭௭)

நிரஞ்சரமென் றீசன் றிருவுரு விரண்டுட்
பரஞ்சரமென் றேதும் பவளவா யண்ணலோ. (௭௮)

அங்கம் புனைவோ னடிப்புனலால் வாதுபவப்
பங்கங் கழுவப் படாதென்று சொன்னானே. (௭௯)

அந்தக் கரணத் தழுக்கறுப்ப தெங்கள்பரன்
சந்தப் பிரசாதந் தானென்று சொன்னானே. (௮௦)

தருணமதிற் சீறுந் தனிவிழிகாட் டாமற்
கருணை குடியிருக்குங் கண்களொடு வந்தானே. (௮௧)

ஏரூருந் தான்வா ழிடமேநற் காசியுந்தென்
னாரூரு மம்பலமு மாக்குசிவ ஞானியோ. (௮௨)

தன்பாத தாமரைதோய் தண்புனலே கங்கையாய்
வன்பாச நீக்க வழங்குசிவ ஞானியோ. (௮௩)

மண்படைத்த நான்முகனார் மானுடர்த மொண்முகத்திற்
கண்படைத்த பேறுபெறக் காட்டு முருவானே. (௮௪)

ஆர்க்குங் கொடுநோ யனைத்துங் கடைக்கண்ணாற்
தீர்க்குங் கருணைச் சிவஞான தேசிகனே. (௮௫)

செப்ப முறவெனது சிந்தைவிட் டாசையெனுங்
குப்பை துகைத்துக் குடியிருக்க வல்லானே. (௮௬)

தன்னையரு ளாளனெனுந் தன்மை யுலகறிய
வென்னையடி யாரோ டெழுந்தருளிக் காத்தானே. (௮௭)

மெய்த்த வறிவாம் விளங்குகணை யொன்றெடுத்துத்
தத்துவமா மட்கலத்தைத் தாக்கும் பெருமானே. (௮௮)

வழுவின்றித் தன்மா வலியுலக மேத்த
மழுவின்றிப் பாவ மரமெறிய வந்தானே. (௮௯)

இணையாது மில்லா விடர்ப்பவவே லைக்குப்
புணையாக வந்தருளும் புண்டரிகத் தாளானே. (௯௦)

ஊனே யுயிரோ வுயிர்க்குயிரோ வானந்தத்
தேனே யமுதோ சிவஞான தேசிகனே. (கூக)

அண்ட முழுது மணுவிற் சிறியவாக்
கொண்ட பெருமைக் குணக்குன் றனையானே. (கூஉ)

எங்கண் மலவிருளைக் கீண்டு மயிலைமிசைச்
செங்கதிர்போற் றோன்றுஞ் சிவஞான தேசிகனே. (கூங)

அற்பகலு மாறா தானடியார்க் கீதலுறுங்
கற்பகமாய் வந்துதிருக் காஞ்சிநக ருற்றானே. (கூச)

பூணு மருள்வசவன் பூண்டசர பூசையன்று
காணு வெமக்கின்று காட்டுசிவ ஞானியோ. (கூரு)

விருப்புவெறுப் பின்மை விளக்கவென்புன் சொல்லைத்
திருப்பதங்கொள் கின்ற சிவஞான தேசிகனே. (கூசு)

பொறியூடு செல்லுமனப் போர்க்களிற்றைத் தன்றாட்
டறியூடு நிற்பத் தளைந்தசிவ ஞானியோ. (கூஎ)

பாடியுந்தன் சீர்த்தி பரவியுந்தன் பாதமலர்
சூடியுமிக் காலந் தொலைக்கவருள் செய்தானே. (கூஅ)

பொய்ம்மாயை யென்னும் புலியின்வாய்ப் பட்டேனைக்
கைம்மாறி லாமற் கருணைகொடு மீட்டானே. (கூகூ)

பத்தியுந்தன் பங்கயப்பொற் பாதமே பாடுகின்ற
சித்தியுந்தந் தாளுஞ் சிவஞான தேசிகனே. (கoo)

## சிவஞானபாலையதேசிகர் தாலாட்டு

முற்றிற்று.

17

உ

வேலுமயிலுந்துணை.

## சிதம்பரசுவாமிகள்

அருளிச்செய்த

# தாலாட்டு.

[திருப்போரூர்ச் சந்நிதிமுறையி லுள்ளது.]

### காப்பு.

நேரிசை வெண்பா.

கனகவரை யிருபாற் கங்கைவழிந் தாங்குக்
கனகருணை யேமதமாக் காட்டுங் - கனகவரைக்
கோதகன்ற வீன்றதிருக் குஞ்சரத்தைக் கைதொழுவார்
தீதகன்றார் சேர்வார் திரு.

### நூல்.

பூமாது நாமாது போதசுக மாமாது
தாமேவு போரூர்ச் சரவண நாயகனே. (௧)

மாணிக்க மால்வரைமேன் மன்னுசெக்கர் வானமென
வேணிப் பிரான்றோளின் மேவுஞ் சிறுகுருந்தோ. (௨)

உலகீன்ற மாதா வுதவியபால் கஞ்ச
மலர்வாய்க ளாறு மணக்கின்ற வான்குருந்தோ. (௩)

பெண்ணாய்ந்த கற்புப் பிடியும் பிணைமானுங்
கண்ணாரக் கண்டு களிக்கவரு கற்பகமோ. (௪)

நீலமயில் வாகனனே நெட்டிலைவே லாயுதனே
கோலநிறை கோழிக் கொடிபடைத்த சேவகனே. (௫)

ஆறிரண்டு தோளானே வாறு முகத்தானே
தேறுமறை கொஞ்சுஞ் சிறுசதங்கைத் தாளானே. (௬)

மகுடங்க ளாறு மணிக்குழைக ளீராறுந்
திகழ்கடக மீராறுஞ் சிலம்புந் தரித்தானே. (௭)

சடைமேற் பிறையைமுர்நா றன்றைப் பிணித்தணிந்த
விடையான் மடிமேல் விளையாடு மாரமுதோ. (௮)

செஞ்சதங்கை கொஞ்சச் சிறுகிங் கிணியாடக்
கஞ்சமலர்த் தாளுமையாள் கண்களிக்க வந்தானே. (௯)

ஆய்மா ரறுவர்களு மம்பிகையுங் கங்கையின்னுஞ்
சேயேயென் றேந்திச் சிரமோந்து கொள்குருந்தோ. (௧௦)

கானத் திரிவேடர் கன்னிகைக்காகப் பரண்மேன்
ஞானங்கமழ் பாத நண்ணவைத்த நாயகமோ. (௧௧)

புராரிசிறு வாவென்னப் பூவுலகங் காக்கு
முராரிமரு காவென்ன முன்வந்து நின்றானே. (௧௨)

அமரா பதியி லமரரெல் லாஞ்சூழ்ந்து
தமராகி வாழ்த்தவெள்ளைத் தந்திமேல் வந்தானே. (௧௩)

அண்ட மனந்த மருளுருவி னின்றிலகக்
கண்டமரர் போற்றக் கனகவரை நின்றானே. (௧௪)

தவமுனிவர் தேவர் சயசயவென் றேத்த
நவவீர ராமணிக்கு நடுவிருந்த நாயகமே. (கரு)

பொதிய முனியகத்துப் பொங்குமிரு ணீங்க
விதியு மறியா விளக்கேற்றுந் தேசிகனே. (கசு)

அருணகிரி நாத னருந்தமிழ்நூற் சீரன்
கருணைபெற வோதுங் கவிமாலைத் தோளானே. (கஎ)

பிரமனறியாப் பிரணவத்தி னத்த
மரனார் செவிகுளிர வன்றுரைத்த சற்குருவே. (கஅ)

அரிவைமுரு காவென் றழைக்குமுன்னே வந்து
கரமுதவி நின்ற கருணைப் பெருந்தேவே. (ககூ)

வேலைக் கலைபயின்ற மேதகுபொய் யாமொழிக்குப்
பாலைக் கடையிதென்று பகர்ந்தபெரும் பாவலனே. (உ௦)

தார்மார் பகனே சமரபுரி நாயகனே
சூர்மார் புருவத் தொளைத்தவடி வேலவனே. (உக)

குன்றமுங் கொக்குங் குரைகடலுஞ் சூர்மார்புங்
குன்றவடி வேலெறிந்த கொற்றவனே நற்றவனே. (உஉ)

சமரபுரித் தேவே தணிகைமலைத் தேனே
வமரும் பழனிமலைக் கானமணி விளக்கோ, (உங)

சீரலைவாய் முத்தோ திருப்பரங்குன் றத்தரசே
வேரகத்தி லென்று மிருந்தபெரு[illegible]வா. (உச)

பழமுதிர் சோலைப் பரனே குறிஞ்சிக்
கிழவனென நல்லோர் கிளக்கும் பெருமானே. (உரு)

சங்கப் பலகைத் தமிழைப் புலவோர்க்குப்
பங்கப் படாமற் பகர்ந்தபெரும் பாவலனே. (௨௬)

நாயினேன் செய்பிழைக ணாடா தெனதுளமே
கோயிலாக் கொண்டு குடியிருந்த மெய்ப்பொருளோ. (௨௭)

வானவர்சூழ் போருநரை வந்தடைந்த பேர்க்கெல்லா
மோனசுகங் காட்டி முத்திதருந் தேசிகனே. (௨௮)

உள்ளத் திமிர மொழித்துச் சிவானந்த
வெள்ளத்து ளன்பர் விளையாட வைத்தானே. (௨௯)

அரனோடு வந்தம்மை யளித்தவள்ளப் பாலைப்
புரைதீர வுண்டவரைப் போதமுறக் கண்டானே. (௩௦)

பொற்றாளம் பொற்சின்னம் பொற்பார் சிவிகையொடு
நற்றரளப் பந்தரையு நம்பர்கையிற் பெற்றானே. (௩௧)

மதுரைச் சமண மதகரிக ளெல்லாஞ்
சிதறத் துரந்த சிவசமய கோளரியோ. (௩௨)

மயிலைநகர் தன்னில் வன்னியடு மென்பைக்
குயிலை நிகருமொழிக் கோதையாய்ச் செய்தானே. (௩௩)

ஆச்சா புரத்தி லனந்த முயிரையெல்லாம்
பேச்சோ டளங்கடந்த பேரின்பம் வைத்தானே. (௩௪)

வந்தோர் பிணிதீர்க்கு மாமருந்தோ வன்பருக்குச்
சந்தோட நல்குஞ் [illegible] மாநிதியோ. (௩௫)

தாயோ தமரோவென் றந்தையோ சற்குருவோ
சேயாக் கருணைபொழி தென்போரி வேலவனே. (௩௬)

உ

19

ஹரி: ஓம்.

பெருமாள் தாலாட்டு

என்னும்

# ஸ்ரீ ராமர் தாலாட்டு.

காப்பு.

பேரான அயோத்திப் பெருமாளைத் தாலாட்டச்
சீரார் குருகையூர்கோன் சேவடிகள் காப்பாமே.

நூல்.

அன்றமரர்க் காக வயோத்தியெனும் பட்டணத்தில்
சென்றன் றவதரித்த திருமாலைச் சொன்னாரோ. (க)

தெள்ளுதமிழ் கொண்டாடச் சீரார் தசரதற்குப்
பிள்ளைவிடாய் தீர்த்த பெருமாளைச் சொன்னாரோ. (உ)

காவ லழியக் கருதிலங்கை தானழிய
மூவ ருடன்பிறந்து மூவுலகை யாண்டானே. (ங)

கருதலர்கள் காலனே கண்ணார்ந்த கற்பகமே
பரிவுடைய தாயார்க்குப் பாற்குடமாய் நின்றானே. (ச)

முத்தோ குலிசமோ மூதொளிமா
சித்தோ தென்போரூர்ச் சிவானந்

பாலோ செந்தேனோ பழமோ பழ
மேலோர் புகழ்போரூர் வீற்றிருந்த

பங்கிளியோ வம்பிகைகண் ணுக்கினிய
போரூர்ச் சுகபூரண வொளியோ, (௩௯)

பாமெய்ஞ் ஞானந்தக் கடலோ
ாற்றுஞ் சமரபுரித் தண்ணளியோ. (௪௦)

தாலாட்டி யெல்லோரு மின்பமுற
சய்யுமெங்க ளுதன்போ ரூரிறையே. (௪௧)

தம்பரசுவாமிகள் தாலாட்டு

முற்றிற்று.